<u>சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.</u>

முன்னிலை– திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் நாள் வியாழக்கிழமை

<u>வழக்கிடை மனு எண்.1/2024 in அசல் வழக்கு எண்.255/2024</u>

மகேஸ்வரி ......மனுதாரர்/ வாதி

/எதிர்/

வேல்முருகன் ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 03.07.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. பாண்டியன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

<u>**உத்தரவு**</u>

இம்மனு பிரிவு 151 உ.வி.மு.ச.வின் கீழ் வாதி தரப்பு 2வது சாட்சியின் சாட்சியத்தை வழக்கு கோப்பில் இருந்து நீக்கரவு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்–**</u>

தான் இவ்வழக்கில் வாதி என்றும், மனுவில் மனுதாரர் என்றும், எதிர்மனுதாரர் தன்னிடம் 04.05.2018 தேதியில் ரொக்கமாய் ரூ.5,70,000/– கடன் பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதி சீட்டினை அதே தேதியில் தன்

பெயருக்கு எழுதி கொடுத்ததாகவும், மேற்படி கடனுறுதி சீட்டில் ஒரு சாட்சி கண்ணன் என்பவர் இறந்துவிட்டதாகவும், மற்றொரு சாட்சியான ஆறுமுகம் என்பவரை தன் தரப்பில் 2வது சாட்சியாக 20.09.2023 தேதியில் விசாரிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் அவரை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் இந்நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றல் ஆகிவிட்டதாகவும், இந்த இடைப்பட்ட காலத்தில் தன் தரப்பு 2வது சாட்சி ஆறுமுகம் என்பவரை எதிர்மனுதாரரும் அவரது அடியாட்களும் சேர்ந்து உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் மிரட்டியதாகவும், இதனால் ஆறுமுகம் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்ல அச்சப்படுகிறார் என்றும், எனவே இனி ஆறுமுகம் (Pw2) குறுக்கு விசாரணைக்கு ஆஜராக மாட்டார் என்பதால் அவரது முதன்மை சாட்சி வாக்குமூலத்தை வழக்கு கோப்பிலிருந்து நீக்க வேண்டியது அவசியம் என்றும், எனவே தன் தரப்பில் 2வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட நபரின் சாட்சியத்தினை நீக்குவதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் பாதிப்பும் ஏற்படாது என்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்:-</u>

எதிர்மனுதாரர் தனது எதிருரையில் மனு சங்கதிகள் அனைத்தையும் மறுத்துள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிருரையில் வழக்கில் தான் ஏற்கனவே எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதாகவும், இச்சூழ்நிலையில் வாதி தரப்பு 2வது சாட்சியின் சாட்சியத்தை நீக்கரவு செய்ய மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு வழக்கினை காலதாமதம் செய்வதற்காகவே தாக்கல்

செய்யப்பட்டுள்ளதாகவும், மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கதக்கதல்ல என்றும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

4. <u>இங்கு தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

**இவ்வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சியின் சாட்சியத்தை வழக்கு கோப்பில் இருந்து நீக்கரவு செய்ய வேண்டுமா? என்பதே ஆகும்.**

(i) இம்மனு பிரிவு 151 உ.வி.மு.ச.வின் கீழ் வாதி தரப்பு 2வது சாட்சியின் சாட்சியத்தை வழக்கு கோப்பில் இருந்து நீக்கரவு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர் தன்னிடம் 04.05.2018 அன்று ரூ.5,70,000/– கடனாக பெற்றுக்கொண்டு கடனுறுதி சீட்டினை எழுதி கொடுத்ததாகவும், கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பமிட்ட ஒரு சாட்சி கண்ணன் என்பவர் இறந்துவிட்டதாகவும், மற்றொரு சாட்சியான ஆறுமுகம் என்பவர் 20.09.2023 தேதியில் முதல் விசாரணை செய்யப்பட்டதாகவும், ஆனால் அதன் பின்னிட்டு எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய அடியாட்கள் சாட்சி ஆறுமுகத்தை மிரட்டி அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் மிரட்டியதால் வா.சா.2 இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராக மறுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனவே வா.சா.2ன் சாட்சியத்தை வழக்கு கோப்பிலிருந்து நீக்கரவு செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனு சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டு இம்மனு காலநீட்டிப்பு செய்வதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் தனது மனுவில் வா.சா.2ஐ எதிர்மனுதாரர் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் மிரட்டியதால் அவர் குறுக்கு விசாரணைக்கு ஆஜராக மறுத்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். வா.சா.2 மனுதாரரான வாதி தரப்பில் 2வது சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 எதிர்மனுதாரரின் அச்சுறுத்தலால் நீதிமன்றத்தில் ஆஜராக மறுத்ததாக மனுதாரர் குறிப்பிட்டிருந்தபோதிலும் வா.சா.2ஐ உரிய பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவோ, நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து வா.சா.2ஐ அவரது இருப்பிடத்திலே விசாரிக்கவோ மனுதாரர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத சூழ்நிலையில் மனுதாரர் தரப்பிலேயே வா.சா.2ஐ சாட்சியாக தொடர்ந்து விசாரிக்க விரும்பவில்லை என்றே தெரியவருகின்றது. வா.சா.2ன் முதல் விசாரணை சாட்சியத்தை நீக்கரவு செய்வதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மனுதாரர் தரப்பிலேயே அவரது சாட்சியமான வா.சா.2ன் சாட்சியத்தை நீக்கரவு செய்ய கோரியுள்ளதால் இம்மனுவை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

<u>**முடிவில்:—**</u>

**இறுதியாக** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.10.09 05:17:40 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.10.09 05:17:46 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.